ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X

புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜூன் 2023

SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=============================================================================

# குறுந்தொகையில் முதல், கரு, உரிப்பொருள்

*முனைவர் அ. ஜனார்த்தலி பேகம்,*
*உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)*
*திருச்சிராப்பள்ளி - 620 020*

=============================================================================

*ஆய்வுச் சுருக்கம்*

*சங்க அக இலக்கியங்களில் முதல், கரு, உரிப்பொருட்கள் அடிப்பைடயில் உருவானதே அக இலக்கியங்கள் ஆகும். தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள அன்பின் ஐந்திணையில் முப்பொருள்களின் வழியே மக்களின் வாழ்க்கை முறை அமைந்துள்ளது. முதற்பொருளை இரண்டாக பிரித்து கூறுவார் தொல்காப்பியர் நிலமும், பொழுதும் முதற்பொருள், தெய்வம் முதல் ஊர் வரை சொல்லப்பட்ட பதினான்கு கருப்பொருள்களும், புணர்ச்சி முதலாக ஊடல் ஈராக சொல்லப்பட்ட ஐந்திணைக்குரிய ஒழுக்கமாகிய உரிப்பொருள்கள் பற்றிய செய்திகளை குறுந்தொகைப் பாடல்கள் வழி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*கலைச் சொற்கள்: நிலம், காலம், கருப்பொருள், உரிப்பொருள், தலைவன், தலைவி*

*முன்னுரை*

*குறுந்தொகையில் அமைந்துள்ள ஐவகைத் திணைகளிலும் வாழும் மக்களின் வாழ்க்கை முறையானது முப்பொருள்களின் வழியே நிகழ்கின்றது. குறுந்தொகையில் ஒவ்வொரு பாடல்களிலும் தலைவன், தலைவி, தோழி, செவிலி போன்றோரின் கூற்றுக்களில் முதல் பொருளாகிய நிலமும் பொழுதும், கருப்பொருளாகிய தெய்வம், உணவு, புல், பறை போன்றவை பற்றியும் ஐந்திணை ஒழுக்கமாகிய புணர்ச்சி, இருத்தல், இரங்கல், ஊடல், பிரிதல் போன்றவற்றை பாடல்களில் புலவர்கள் புகுத்தி இயற்கையோடு இயைந்த மனித வாழ்க்கையைப் பற்றி குறுந்தொகைப் பாடல்களில் மிகவும் அழகாகப் பதிவுசெய்துள்ளார்.*

*முதல், கரு உரிப்பொருள்*

*இன்ப ஒழுக்காமாகிய குறிஞ்சி முதலிய ஐந்திணையும் இனிது விளங்குதற் பொருட்டு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று பொருள் வகுத்து வைத்தனர். முதல், கரு, உரி என்னும் முப்பொருளும் அமையச் செய்யுள் செய்து மக்கள் வாழ்வைச் செம்மைபட நடத்தி வந்தனர் செந்தமிழ்ப் புலவர்கள். அம்முப்பொருளின் பகுப்பு முறையையும், வைப்பு முறையையும் நோக்கின் தன் முன்னோரின் அறிவு நுணுக்கமும் ஆராய்ச்சித் திறனும் வியக்கத்தக்கனவாகும். இதனையே,*

*“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே*
*நுவலுங் காலை முறைசிறந் தனவே*
*பாடலுள் பயின்றவை நாடுங்காலை”*

*(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ப.23,3)*

*சான்றோர்கள் அமைத்த நூல்களுள் சொல்லப்படும் முறைமைகள் மூன்றாக உள்ளது. அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் அவை சாற்றும் பொருள் சிறப்பும், அவற்றின் முறைமையும் இந்நூற்பாவால் அறியலாம் என்கிறார் தொல்காப்பியர்.*

முதற்பொருள்

நிலம், காலம் என்னும் இரண்டும் அதாவது நிலமும் பொழுதும் முதற்பொருள் எனப்படும். இவை கருப்பொருளும் உரிப்பொருளும் தோன்றுவதற்கு முதலாகிய பொருள் நிலம் ஐந்து வகைப்படும். காலம் இரண்டு வகைப்படும். பெரும்பொழுது, சிறுபொழுது ஆகும்.

"முதலெனப் படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ப.24,4)

என்கிறார் தொல்காப்பியர். இதனையே குறுந்தொகைப் பாடல்,

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி"

(குறுந்தொகை, ப.21, பா.18:1-2)

என்று கருப்பொருள் உணர்த்தப்படுகிறது. அதாவது இயல்பாக வளர்ந்த சிறு மூங்கிலாகிய வாழ்வேலியையுடைய வேரிலே குலைகளையுடைய பலா மரங்கள் நிறைந்த மலைச்சாரலைப் பெற்றுள்ள நாட்டையுடையவனே என்று குறிஞ்சி நிலத்தலைவனின் சிறப்பைக் கூறுகிறது.

நிலம்

காடும், காடு சார்ந்த இடம் - முல்லை, மலையும் மலை சார்ந்த இடம் - குறிஞ்சி, வயலும் வயல் சார்ந்த இடம் - மருதம், பாலைக்கு தனியாக நிலமில்லை. இதனை,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், அகத்திணையியல், ப.23:3)

என்று திருமால் விளங்கிக் காக்கும் காடு சூழ்ந்த நிலப்பகுதி முல்லை எனவும், முருகக் கடவுள் காக்கும் மலை சூழ்நத நிலப்பகுதி குறிஞ்சி எனவும் இந்திரன் காக்கும் நீர்வளம் மிக்க ஆறு சூழ்ந்த நிலப்பகுதி மருதம் எனவும், வருணன் விளங்கிக் காக்கும் கடற்கரை பெருமணல் சூழ்ந்த நிலப்பகுதி நெய்தல் எனவும் சொல்லப்படும் என்கிறார். முதுவேனிற் காலத்தில் காடும் மலையும் வளம் பிரிந்த வறண்ட நிலையே பாலை எனப்படும். இதனை,

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
நல்லியல் பிரிந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை என்பதோர் படிவங் கொள்ளும்"

(அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம், 11:65-69, ப.167)

என்னும் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையில் முல்லை குறிஞ்சி என்னும் பழைய முறைமைகளிலேயிருந்தும் திரிந்து, நல்லியல்புகள் முழுவதும் அறவே இழந்து வழிச் செல்வோரை நடுங்கு துயரம் உறுமாறு செய்து 'பாலை" எனப்படுவது ஒரு கொடிதான வடிவினையும் கொள்ளுகின்ற இக்காலத்திலே மதுரைப் பயணம் மேற்கொள்ளலாமா அது கொடியது என்று உணர்த்துவதால் அறியலாம்.

காலமும் பொழுதும்

பொழுது இருவகைப்படும். அவை பெரும்பொழுது, சிறுபொழுது என்பதாகும். நிலத்திற்கேற்ப சிறுபொழுதும், பெரும்பொழுதும் அமையும். குறிஞ்சி - கூதிர், முன்பனி (ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை) யாமம், முல்லை – கார் (ஆவணி, புரட்டாசி) மாலை, பாலை - இளவேனில், முதுவேனில், பின்பனி (மாசி முதல் ஆடி வரை) நண்பகல் மருதம் - ஆறு பொழுதும், வைகறை, நெய்தல் - ஆறு பொழுதும் நம் முந்தையோர் ஓராண்டை ஆறு பருவங்களகப் பகுத்துள்ளனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்பன. கார் - மழைக்காலம், கூதிர் குளிர், முன்பனி - முன்னிரவில் பனி பெய்யுங்காலம், பின்பனி - பின்னிரவில் பனிப் பெய்யுங்காலம், வேனில் - வெயில் என்பனவாகும். இதனை பரணர்,

"கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ?"

(குறுந்தொகை, ப.72, பா.24)

என்று வேம்பு பூக்கும் இளவேனில் பருவம், தலைவன் வினைமுடித்து வருவதாகக் கூறிச் சென்ற பருவமாகும். பாண்டியரும் அவர் படையும் சூடும் சிறப்பால் 'ஒண்பூ" எனப்பட்டது என்கிறார்.

கருப்பொருள்கள்

கருப்பொருள்கள் ஐவகை நிலங்களுக்கு ஏற்ப மாறுபாடும். இதனைத் தொல்காப்பியம்,

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"

(தொல்காப்பியம், பொருளதிகாரம், ப.35,20)

தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், யாழ், பண் என வரும் இவற்றின் வகையும் இவை போன்ற பிறவும் கருப்பொருள் ஆகும். அதாவது தெய்வம், உணவு, விலங்கு, மக்கள், மரம், பறவை, பறை, தொழில், யாழ், பண், பூ, நீர், ஊர் என்பனவாகும். இதனை,

"பொய்கை ஆம்பல் அணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்துறை ஊரனொடு
இருப்பின் இருமருங் கினமே கிடப்பின்
வில்லது விரலின் பொருந்தி அவன்
நல்அகம் சேரின் ஒருமருங் கினமே"

(குறுந்தொகை, ப.324, பா.370)

என்ற பாடலால் அறியலாம். பொய்கையில் வளரும் ஆம்பலினது (பூ) அழகிய நிறத்தோடு கூடிய வளமான அரும்பினை ஊதி 'வண்டுகள்" இகழ்வாயைத் திறக்கும் குளிர்ந்த நீர்த்துளிகளையுடைய ஊருக்கு உரியவனான தலைவனோடு கூடியிருப்பின் இரண்டு உடலையுடையோம். இதில் பூ, வண்டு, நீர், உயர்ந்தோர் போன்ற கருப்பொருள்கள் அடங்கியுள்ளன.

உரிப்பொருள்

உரிப்பொருள்கள் எது என்பதனைப் பழம்பாடல் ஒன்று கூறுகிறது.

"போக்கெல்லாம் பாலை, புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சே ரூடல் அணிமருதம் - நோக்குங்கால்
இல்லிருத்தல் முல்லை இரங்கல் நறுநெய்தல்
சொல்லிருந்த நூலின் றொகை"

(புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத்தமிழர், ப.81)

என்று புலவர் குழந்தை கூறுகின்றார்.

"அட்ட மள்ளர் ஆர்ப்புஇசை வெரூஉம்
குட்டுவன் மாந்தை அன்னஎம்
சூழல்விளங்கு ஆய்நுதற் கிழவனும் அவனே"

(குறுந்தொகை, ப.88, 6-8)

என்று வெற்றி கொண்ட வீரரின் ஆரவார ஒலியைக் கேட்டு அஞ்சுதற்கு இடமான குட்டுவனது மாந்தை என்னும் பட்டினத்தைப் போன்ற என்னுடைய கூந்தல் விளங்குகின்ற அழகிய நெற்றிக்கு உரிமையுடையோன் முன்னரும் வரைவொடும் வந்த அத்தலைவனே ஆவான் என்று கொல்லிக் கண்ணன் கூறுகிறார்.

தலைவனும் தலைவியும் கூடி மகிழ்தல் குறிஞ்சி, தலைவன் தலைவியைப் பிரிதல் பாலை, தலைவன் பிரியின் தலைவி ஆற்றியிருத்தல் முல்லை, தலைவனது பிரிவாற்றாமையால் தலைவி இரங்கல் நெய்தல், தலைவனோடு தலைவி ஊடல் மருதமாகும்.

புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல் ஊடல் என்னும் ஐந்தும் உரிப்பொருள் ஆகும். ஐவகை அகவொழுக்கங்கள் அன்பின் ஐந்திணை இவை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்னும் நிலங்களில் நிகழும் உரிப்பொருள் அகவொழுக்கத்திற்கு உரிய தலைவன், தலைவியின் வாழ்விற்கு உரிய பொருள் என்று விளக்குவர். கருப்பொருள் நில முதற்பொருளில் இருக்கும். உணவு, பூ முதலியன சில கருப்பொருள்கள். கால முதற்பொருளில்

*தோன்றும் பொருளுமாம். உரிப்பொருள் நில முதற்பொருளிலும் கால முதற்பொருளிலும் நிகழும் பொருள் கருப்பொருள் உரிப்பொருளறிவுக்குக் கருவாய் அமையும் பொருளாகும்.*

*தலைவன், தலைவி இருவர்க்கும் ஒப்ப நிகழ்தலான் முதலிலும் பிரிவன்மையான் பிரிவை அதன் பின்னும், தலைவன் பிரியின் தலைவி ஆற்றியிருத்தல் அவன் பிரிவைப் பொறுத்திருத்தல் முல்லையாதலின் இருத்தலை அதன் பின்னும், அங்ஙனம் ஆற்றியிராது தலைவி இரங்கலை அதன் பின்னும், இரங்கிய தலைவி, தலைவன் வரின் ஊடுவாளாதலின் ஊடலை அதன் பின்னும் வைத்தனர் ஆசிரியர் புணர்ச்சி குறிஞ்சி நிலத்தினும், பிரிவு பாலை நிலத்தினும் இருத்தல் முல்லை நிலத்தினும், இரங்கல் நெய்தல் நிலத்தினும், ஊடல் மருத நிலத்தினும் நிகழும் என்பது செய்யுள் வழக்கம். இதனையே தொல்காப்பியர்,*

*“முதலொடு புணர்ந்த யாழோர் மேன*
*தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே”*

*(தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், ப.145,104)*

*என்கிறார். முதலொடு புணர்ந்த நிலமும் காலமுமாகிய முதற் பொள்களோடு கூடிய யாழோர்மேன புணர்ச்சியானது தவலரும் சிறப்பின் கெடலருஞ் சிறப்பினையுடைய ஐந்நிலம் பெறும். குறிஞ்சி முதலிய ஐந்து நிலத்தின் கண்ணும் நிகழும். இது உலக வழக்காகும். யாழிசை இன்பத்தின் பாலதாகலின் புணர்ச்சியை யாழோர்மேன என்றார். குறிஞ்சி நிலமே அன்றி மற்ற நிலங்களிலும் புணர்ச்சி நிகழுமென்பது உணர்த்தப்படுகிறது. இதனால் மற்ற ஒழுக்கங்களும் ஐந்நிலம் பெறும் என்பதுதானே கூறப்படுகிறது. வேனிற் காலத்துக் கடுவெயிலால் முல்லையும் குறிஞ்சியும் திரிந்தாகிய பாலை நிலத்தில் வாழ்பவரிடையும் புணர்ச்சி நிகழும், எல்லா நில மக்களிடையும் நிகழும் புணர்ச்சி முதலிய ஐவகை ஒழுக்கங்களையும் சிறப்புப் பற்றியும் ஒவ்வொரு நிலத்திலும் நிகழும் என வகைப்படுத்திச் செய்யுள் செய்து சிறப்புடன் போற்றி வாழ்ந்து வந்தனர். பழந்தமிழ் மக்கள். பழந்தமிழ் மக்களாகிய நம் முன்னோர்கள், இன்ன நிலத்தில் இன்ன காலத்தில் இன்ன நேரத்தில் இவ்வகையான ஒழுக்கம் நிகழும் என்று வகைப்படுத்திக் கூறியுள்ளார்.*

*குறிஞ்சி*

*குளிர்கால யாமத்தில், குறிஞ்சி நிலத்தில் மாலையில் நிகழும் கதிரவனின் செங்கதிர்களால் பொன்னிறமாய் விளங்கும். இளநீலமுகில் சூழ்ந்த மலையடுக்குகள் தம் பொன்னிறத்தால் தம்மிடம் வருவாருள்ளத்தை உருக்கி நட்புணர்வை உண்டாக்குகின்றன. ஐப்பசி, கார்த்திகை மாதங்களாகிய குளிர்காலமும், அக்கால யாமமும் நள்ளிரவும் குறிஞ்சிக்குரியன. களவொழுக்கத்தில் தலைவியைக் காணுதல் தலைவனுக்கு சிறப்பைத் தரும். விலங்குளும் பறவைகளும் இணைபிரியாது உடனுறையும் காலமும் அதுவே குளிர்காலமாகும். இதனையே,*

*“யாயும் ஞாயும் யார் ஆகியரோ*
*எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்*
*யானும் நீயும் எவ்வழி அறிதும்*
*செம்புலப் பெயர் நீர் போல*
*அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”*

*(குறுந்தொகை, ப.43,40)*

*என்னும் குநற்தொகைப்பாடல் வழி அறியலாம். இயற்கைப் புணர்ச்சிக்குப் பின்னர், பிரிவர் எனக் கருதி அஞ்சிய தலைமகள் குறிப்பு வேறுபாடு கண்டு தலைமகன் கூறுகிறான். என் தாயும் உன் தாயும் என்ன தொடர்புடையவர்? என் தந்ைதையும் நின் தந்தையும் எம்முறையில் உறவினராவர்? யானும் நீயும் எவ்வாறு முன்பு ஒருவரையொருவர் அறிந்தோம். இவ்வகையான சூழல் எதுவும் இன்றியே செம்புலமாகிய பாலை நிலத்தில் பெய்த மழைநீர் அந்நிலத்தே ஒன்றாய் கலந்து விடுதல் போல அன்புடைய நம் நெஞ்சங்கள் தாமாகவே ஒன்றுபட்டன. ஆகவே நாம் இனிப் பிரிதல் என்பது அரிதான செயலாகும் என்று தலைவன் கூறுவதாக பாடல் அமைந்துள்ளது. இப்பாடலின் பொருளில் உண்மையான காதல் எப்பொழுதும் பிரியாது, அதைப்போல காதல் இயற்கையானது. அதனால் அதற்கான சான்றும் இயற்கையாகவே தந்திருப்பது இலக்கிய நயத்தைக் குறிப்பதாக அமைகிறது.*

*பாலை*

*வேனிற்கால நண்பகலில், பாலை நிலத்தில் பிரிவொழுக்கம் நிகழும். பாலை என்பது முல்லை குறிஞ்சி நிலங்களிலுள்ள மரஞ்செடி கொடிகளின் வளம் வெயிலால் உலர்ந்து அந்நிலங்களை விட்டுப் பிரிந்த வறண்ட தன்மை நீர் நிழல் இல்லாமை, பசியால் வாடியலையும் கொடிய விலங்குகள் உள்ளன. அவ்வழிச் செல்வோர்க்குத் துன்பந்தருமாகையால் பிரிந்திருக்கும் தலைவிக்கு அருளுணர்வு பிறத்தற்கு ஏதுவாகிறது. பிரிந்து போகின்ற நிகழ்வுகள் பாலையாகும். மாசி முதல் ஆடி ஈறாக உள்ள ஆறு மாதமும் பின்பனி, இளவேனில், முதுவேனில் மழையின்றி இருக்குமாகையால் இக்காலமே அயலூர் செல்வதற்கு ஏற்ற காலமாகும். வேறிடத்திற்கும் வேறு நாட்டிற்கும் செல்வோர் அவ்வறண்ட வெயிலின் கொடுமை மிகுதியாக இருக்குமாதலானும் இக்காலங்கள் பிரிவுக்கு ஏற்றவையாயின. குறுந்தொகையில் கோப்பெருஞ்சோழன் எழுதிய பாலைப் பாடலில்,*

*"அருளும் அன்பும் நீக்கி, துணை துறந்து*
*பொருள்வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்*
*உரவோர் உரவோர் ஆக*
*மடவம் ஆக மடந்தை நாமே"*

*(குறுந்தொகை, ப.64,20)*

*தோழியே! தொடர்பிலார் மீது தோன்றும் அருளையும் தொடர்புடையார் மீது தோன்றும் அன்பையும் துறந்து பொருள் தேடும் நோக்கம் ஒன்றே உடையவராக நம்மைப் பிரிந்து செல்லும் காதலர் அறிவுடையவராயின் அத்தகைய ஆற்றலையுடைய அவர் இவ்வுலகில் நிலையில்லாததும் ஆகிய பொருளை எண்ணிப் பிரிபவர் அறிவுடையராக இருத்தல் இயலாது. அருளும் அன்பும் துறந்து பொருள்வயின் செல்லும் அறிவைவிட அருளும் அன்பும் உடையவராய்த் துணையொடு உறையும் மடமை உயர்ந்தது என்பதைத் தலைவி தோழிக்கு உணர்த்தியவிதம் குறுந்தொகையில் மிக அழகாக வெளிப்படுகிறது.*

*முல்லை*

*கார்கால மாலையில், முல்லை நிலத்தில் இருத்தல் ஒழுக்கம் நிகழும். இருத்தல் என்பது பிரிந்து சென்ற தலைவன் வரும் வரை தலைவி ஆற்றியிருத்தல் ஆகும். மரம், செடி, கொடிகள் தழைத்த காட்டு நிலம், பசுமை நிறத்தால் தன்னிடம் வாழ்வார் உள்ளத்தைக் கிளர்ச்சி பெறச் செய்து அன்புணர்வை உண்டாக்குகிறது. ஆவணி, புரட்டாசி மாதங்களாகிய கார்காலமே வெளியூர் சென்ற தலைவன் மீளுங் காலமாகும். வெயிற் காலத்திலேயே போன காரியத்தை முடித்துக் கொண்டு மழைக்காலம் வந்ததும் திரும்புவான். தலைவன் வரும் நேரம் மாலையாகும். நாள்தோறும் வெளிவேலைகளை முடித்துத் தலைவன் வீட்டுக்கு வரும் நேரமும் மாலைக் காலமே தலைவியும் ஓரிடத்தில் அமைதியாக இருக்கும் காலம் அதுவே. முல்லை நிலமானது மாலை நேரத்தில் சாயுங்காலத்தில் தங்கிப் பொழுது போக்குதற்கு ஏற்ற புற்றரையும் நறுமணக் காற்றும், மரநிழலும் உள்ள இடமாதலால் இருத்தல் ஒழுக்கத்திற்குச் சிறந்த இடமாகும். இதனையே,*

*"கதுப்பிற் தோன்றுமு; புதுப்பூங் கொன்றைக்*
*கானம் கார் எனக் கூறினும்*
*யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே"*

*(குறுந்தொகை, ப.30,30)*

*என ஓதலாந்தையார் கூறுகின்றார். வண்டுகள் ஒலிக்க, நெருங்கிப் பூத்த நீண்ட பூங்கொத்துக்களைத் தழைகளுக்கிடையே இட்டு, பொன்னால் புனைந்து செய்யப்பட்ட அணிகலன்களைச் சுற்றிக் கட்டிய மகளிரின் கூந்தலைப்போல கொன்றை மரங்கள் புதிய பூக்களுடன் பொலிந்து தோன்றும். அவைகளையுடைய காடு, கார்ப்பருவம் இது என்று தானே வாய் திறந்து கூறினாலும், அவர் சொன்ன சொல் தேறிய யான், தெளியேன். ஏனெனில் அவர் பொய்மொழியைக் கூறமாட்டார் என்கிறாள் தலைவி. முல்லைநிலத் தன்மையை இப்பாடல்வழி அறியலாம்.*

*நெய்தல்*

*காலை நேரத்தில் நெய்தல் நிலத்தில் இரங்கல் ஒழுக்கம் நிகழும். கடலில் நெடிய அலைகள் நொடி தோறும் எழுந்து மறையும். அதனால் கடற்கரையில் மணல்மேடு உண்டாகிச் சிறிது நேரம் நிலைத்துப் பின் அழியும். இக்காட்சி பிறப்பு இறப்புகளையும் அவற்றின் நிலையாமையையும் நினைப்பித்து, இரக்க உணர்வை உண்டாக்குகின்றது. காலை நேரத்தில்தான் கடல்வழிச் சென்றாரை எதிர்பார்த்திருக்கும் காலமாகும்.*

*“நோம்என் நெஞ்சே நோம்என் நெஞ்சே*
*இமைதீய்ப் பன்ன கண்ணீர் தாங்கி*
*அமைதற்கு அமைந்தநம் காதலர்*
*அமைவுஇலர் ஆகுதல் நோம்என் நெஞ்சே”*

*(குறுந்தொகை, ப.6,4)*

*என்ற குறுந்தொகைப் பாடலில் தலைவி தோழியிடம் தன் நெஞ்சு நோகுவதாகக் கூறுகிறாள். எவ்வாறு என்றால் கண்ணிமைகளைச் சுடுவது போன்ற வெம்மையான கண்ணீரைத் துடைத்துத் தடுத்து உடனிருந்து அளவளாவுதற்குரிய தலைவன் இப்பொழுது உடன் இல்லாத காரணத்தால் பிரிவாற்றாமை மிகுதி தோன்ற என் நெஞ்சு நோகும் என்று மும்முறை கூறினாள்.*

*முன்பு கண்ணீரைத் தலைவன் தடுத்தவராதலினால் மீண்டும் அவர் வந்து தலையளிசெய்வார் என எண்ணி ஆற்றுவேன் என்று பிரிவுத் துயரால் தலைவி வருந்தும் நிலை இங்கு உணர்த்தப்படுகிறது.*

*மருதம்*

*வைகறையில் மருத நிலத்தில் ஊடல் ஒழுக்கம் நிகழும் என்பர். வெள்ளியை உருக்கி வார்த்தாற் போன்ற பளபளப்பான நீர்வளமிக்க வயல் நிலமானது, தனது வளஞ் சேர்ந்த வெண்ணிறத்தால், வளம்பெருக்கால் தன்னிடம் வருவோருள்ளத்தில் பல அரிய தொழில் முயற்சிகளுக்கு இடம்தந்து அறிவுணர்வை உண்டாக்குகிறது. மாட மாளிகைகளும் பல்வகைச் செல்வங்களும் ஊடலை உண்டாக்கும் செல்வச் செருக்கே ஊடலுணர்ச்சிக்குக் காரணமாகும். பரத்தையரிடத்தில் இருந்து தலைவன் வருங்காலம் வைகறையே ஆதலான், அது தலைவி ஊடுதற்குரிய காலமாகும். செல்வமும் தலைமையுமே பரத்தமைக்குக் காரணமாகையால் மருத நிலத்தேதான் தலைவனது பரத்தமையும் அது பற்றித் தலைவிக்கு ஊடலும் நிகழும். இதனையே,*

*“திட்டத்தை மீறிச் சிதைக்கினும் நல்லொழுக்கச்*
*சட்டத்தை மீறல் தகவன்றால் - விட்டத்தின்*
*திண்மையழிந் தோரிடத்துச் செல்லேறின் மேற்கூரை*
*உண்மையிலே வீழ்ந்திடுமன்றோ?”*

*(புலவர்குழந்தை, தொல்காப்பியர் காலத்தமிழர், ப.110)*

*என்று புலவர் குழந்தை கூறுகின்றார்.*

*“இனைமதி வாழிய நெஞ்சே மனைமரத்து*
*எல்உறும் மௌவல் நாறும்*
*பல்இருங் கூந்தல் யாரளோ நமக்கே”*

*(குறுந்தொகை, ப.22, பா.19:3-5)*

*என்னும் குறுந்தொகைப் பாடல் தலைவன் பொற்பூ அணியப்பெறாத வறிய தலையைப் போல நீயும் பொலிவிழந்து வருந்துவாயாக. மனைத் தோட்டத்தில் உள்ள மரத்தின் மீது படர்ந்த, ஒளியுடைய முல்லை மலரின் மணம் கமழும் பலவாகிய கரிய கூந்தலையுடைய இவள் மரத்தில் முல்லைக் கொடியைப் படரவிடுவர் எளிதில் பறித்துச் சூடுவதற்கு இயலாதவாறு. அதன் மலர்கள் மரத்தின் மேல் பூத்திருத்தல் போலத் தலைவியும் தன்னால் நுகரப்படுவதற்கு அரியளாய் நின்றனள் என வருந்துவதாக பரணர் கூறுகிறார்.*

*முடிவுரை*

*தலைவன், தலைவி இருவரது மனம் ஒத்த அன்பை மையமாக வைத்து வகுக்கப்பட்ட இலக்கணங்களாகும். தலைவன் தலைவியின் அக ஒழுக்கம் பற்றிக் கூறப்படுகிறது. அகத்திணைப் பாடல் எந்தத் திணையைச் சார்ந்தது எனக் கண்டறிய உதவுவதே உரிப்பொருள்கள் ஆகும். முன்னோர்கள் நிலங்களுக்குகேற்ப காலங்களையும் பொழுதுகளையும் சரியான முறையில்*

*கணித்துத் தந்திருக்கின்றன. பருவ நிலைக்கு ஏற்ப அந்தந்த பகுதிகளில் வாழும் உயிரினங்கள் அவற்றின் செயல்பாடுகளை மக்களின் வாழ்க்கையோடு இயைந்து கூறியிருப்பது சிறப்பிற்குரியதாகும்.*

*துணைநூற்பட்டியல்*


1. *இராமசுப்பிரமணியன். த.வ., தொல்காப்பியம் (பொருளதிகாரம்), பூம்புகார் பதிப்பகம், சென்னை, மு.ப.2008*
2. *சாமிநாதைய்யர். உ.வே., குறுந்தொகை, கபீர் அச்சுக்கூடம், சென்னை, மு.ப.1937*
3. *அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும், உ.வே.சா. பதிப்பகம், சென்னை, ஏழாம் பதிப்பு 1960*
4. *புலவர் குழந்தை, தொல்காப்பியர் காலத் தமிழர், பூம்புகார் பதிப்பகம், சென்னை, பதிப்பு 1985*
5. *சௌரிப்பெருமாள் அரங்கனார். தி, குறுந்தொகை மூலமும் புத்துரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2015*
6. *இளம்பூரணர், தொல்காப்பியம் (பொருளதிகாரம்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, இ.ப.1956*


********* ********* ********** ********* ********* ********** ********** **********